**சுருக்கம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் – 25 ஆண்டுகள் நிறைவு – ஜுன் 03 ஆம் நாளினை "சுய உதவிக் குழு தினம்" ஆக கடைபிடித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி-3(1)) துறை**

அரசாணை (நிலை) எண். 72 நாள்: 02.06.2023

சோபகிருது வருடம், வைகாசி 19

திருவள்ளுவர் ஆண்டு, 2054

படிக்கப்பட்டது:

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரின் நேர்முகக் கடித எண்.2173/திவ/2023, நாள்:25.05.2023.

******

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்கள் நாட்டின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு மகளிரின் பங்கு மிக முக்கியமானதாகும், இந்த பங்கினை மேலும் உயர்த்துவதற்கு தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது எனவும், குறிப்பாக, சுய உதவிக் குழுக்களை அமைத்தல் மற்றும் அவர்களை பல்வேறு வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி அதன் மூலம் சுயமாக பொருளாதாரத்தில் நிலைத்து நிற்கும் வகையில் அவர்களுக்கு சுய உதவிக் குழு வங்கி கடன்கள், நிதி உதவிகள் மற்றும் பண்ணை மற்றும் பண்ணை சாரா தொழில்களை தொடங்க ஊக்க நிதி வழங்கப்பட்டு வருவதுடன் கிராமப்புற படித்த இளைஞர்களுக்கு பல்வேறு திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு இதன் மூலம் வேலைவாய்ப்புகள் பெற்று சுயசார்புடன் இருப்பதற்கு வழிவகை ஏற்படுத்தப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

2. மேலும், மகளிரின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் டாக்டர். கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் 1989 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் முதல் முறையாக சுய உதவிக் குழுவைத் தொடங்கினார், இதுவே 1997 ஆம் ஆண்டு மாநில திட்டமாக 'மகளிர் திட்டம்' என்ற பெயரில் ஊக்கமளிக்கும் வகையில் அமைந்தது. தற்பொழுது ஊரகம் மற்றும் நகரப் பகுதிகளில் 4.48 இலட்சம் சுய உதவிக் குழுக்களில் உள்ள 50.80 இலட்சம் உறுப்பினர்கள் அனைவரும் மகளிர் திட்டத்தின் உறுப்பினர்கள் என தங்களை அடையாளப்படுத்துவதில் பெருமை அடைகிறார்கள். மேலும், "மதி" என்பது சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் அடையாளமாக மாநில அளவில் உள்ளது மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் 'மதி' ('மகளிர் திட்டம்' என்பதன் சுருக்கம்) என்ற பெயரில் வர்த்தக முத்திரையை பெற்றுள்ளது. 2023 ஆம் ஆண்டுடன் மகளிர் திட்டம் தொடங்கி 25 ஆண்டுகள் நிறைவடைகிறது. இதனை நினைவு கூறும் வகையில் சுய உதவிக் குழு தினத்தை கடைபிடிக்க உரிய ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

3. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு ஆய்வு செய்தது. ஆய்வுக்குப் பின், தமிழ்நாட்டில் முதன் முதலாக சுய உதவிக் குழுவைத் தொடங்கி வித்திட்ட தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர். கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் பிறந்த தினமான ஜுன் 03 ஆம் நாளினை ஒவ்வொரு ஆண்டும் சுய உதவிக் குழுக்களின் மேம்பாடு குறித்த அறிவிப்புடன் சுய உதவிக் குழு தினமாக கடைபிடிப்பதற்கு அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ப.செந்தில்குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.

**நகல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34 வழியாக)
முதலமைச்சரின் செயலாளர்–III, தலைமைச் செயலகம், சென்னை–09.
மாண்புமிகு அமைச்சர் (இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 09.
தலைமை செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை–09.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–09.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
02/06/2023